

பூஜைக்குத் தேங்காய் பழம் படைப்பதுபற்றி நான் அனுப்பிய வரைபடத்தில் நீங்கள் குறிப்பிட்டதுபோல் பழங்களுக்கிடையில் (நடுவில்) இருப்பது வெற்றிலை பாக்குத்தான். வெற்றிலை பாக்கை வைத்து அதன் மேல் பழங்களை வைத்து, உடைத்த தேங்காயை இருபக்கங்களிலும் (நான் முன்பு அனுப்பிய வரைபடத்திலிருப்பது போல்) வைக்கப்படும்.

பூஜைக்குத் தேங்காய் பழம் படைக்கும் பொழுது வெற்றிலை பாக்கை வைத்து அதன் மேல் பழங்களை வைப்பதே வழக்கம்.

பூஜைக்குப் பழங்களைப் படைக்கும் பொழுது முக்கியமாக  இம்மாதிரியாகவே படைக்கப் படுகிறது. முக்கியமாகப் பண்டாரஜாதி பூசாரிகள் இம்மாதிரிதான் படைக்கிறார்கள். ஆனால் பிராமணர்களில் சிலர்  இம்மாதிரி படைப்பதையும் பார்த்திருக்கிறேன்.

ஆகவே சிவபெருமானுக்கு  இந்தமாதிரி படுக்கையாகவும், விஷ்ணுவிற்கு  இம்மாதிரி செங்குத்தாகவும் படைக்கவேண்டுமென்ற முறையெதுவும் கிடையாது என்று நினைக்கிறேன். பூஜைக்கு இம்மாதிரி பழங்களைப் படைப்பதற்கும் சிவனுக்கு நெற்றியில் விபூதிக்கோடு போடுவதற்கும், விஷ்ணுவுக்கு நீண்ட கோடுகள் (நெற்றியில்) போடுவதற்கும் சம்மந்தமில்லையென்று நினைக்கிறேன். எந்தத் தெய்வமாக இருந்தாலும் சிலர் படுக்கையாகப் (இம்மாதிரி) பழங்களைப் படைப்பதையும், சிலர்  இம்மாதிரி செங்குத்தாகப் படைப்பதையும் பழக்கமாகக் கொண்டுள்ளார்கள் என்றே நினைக்கிறேன். ஒரு தெய்வத்திற்கு இரண்டு பழங்களுக்குமேல் சீப்புடன் பழங்களைப் படைக்கும் பொழுது —  இம்மாதிரி படைக்கப்படுகிறது. அது எந்தத் தெய்வமாக இருந்தாலும் சரி, பிராமணன் அல்லது பண்டாரம் எந்தப் பூசாரியாக இருந்தாலும் சரி —

பல பழங்களைக் கொண்ட சீப்புடன் பழங்களை முன்பக்கத்தில் திருப்பிவைப்பது போல்தான் படைக்கப்படும். இம்மாதிரி படைக்கப்படுவதில்லை.

புண்ணியார்ச்சனை, கும்பாபிஷேகம் போன்ற சடங்குகளின் பொழுது பிராமணர்கள் உபயோகிக்கும் கலசத்திற்கு மாந் தழைகளையும், தர்ப்பைப் புல்லையும் வைக்கிறார்கள். மாரியம்மன், மாகாளியம்மன் போன்றவைகளின் சக்திக் கும்பத்திற்கு வேப்பிலையை வைக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் மாந்தழைகள் வைப்பது ஆண் தெய்வத்திற்குத்தான் என்று பொருள்படாது, இருக்காது. ஒரு ஆண் தெய்வத்தின் கோவிலில் புண்ணியார்ச்சனை செய்வதற்கும், கலசத்திற்கு மாந்தழைகளை உபயோகப் படுத்தப் படுகிறது. அதே போல் ஒரு பெண் தெய்வத்தின் கோவிலில் புண்ணியார்ச்சனை செய்வதற்கும் மாந்தழைகள் உபயோகப் படுத்தப் படுகிறது. ஒரு ஆண் தெய்வத்திற்கு கும்பாபிஷேகம் செய்யும் பொழுது அந்தக் கலசத்திற்கு ~~[illegible]~~ மாந்தழைகள் உபயோகப் படுத்தப் படுகிறது அதே போல் ஒரு பெண் தெய்வத்திற்கு கும்பாபிஷேகம் செய்வதற்கு கலசத்திற்கு மாந்தழைகள் உபயோகப் படுத்தப் படுகிறது. ஆகவே, மாந்தழைகளை உபயோகிப்பதால் அது ஆண் தெய்வமென்று பொருள்படாது. ஆனால் மாரியம்மன் மாகாளியம்மன் போன்ற சக்திகளுக்கு வேப்பிலை உகந்தது. இதுபோன்ற சக்திகளைக் கங்கையிலிருந்து அழைத்து வருவதற்கு வேப்பிலையை உபயோகப் படுத்துகிறார்கள். ஆகவே மாரியம்மன் மாகாளியம்மன் போன்ற பெண் தெய்வங்களுக்கு கும்பம் தாளிப்பதற்கு வேப்பிலையை உபயோகப் படுத்துகிறார்கள். இத்தெய்வங்களுக்கு வேப்பிலை உகந்ததாகவும், அது ஒரு தெய்வீகத் தழையாகவும் ~~[illegible]~~ கருதப் படுகிறது. வேப்பிலையைக் கும்பத்தில் வைத்தாலே அது ஒரு பெண் தெய்வத்தைத்தான் குறிக்கிறது.


கலசங்களில் மாவிலையை உபயோகிப்பது முக்கியம் பிராமணர்கள் தான். காரணம் புண்ணியார்ச்சனை, கும்பாபிஷேகம் போன்ற சடங்குகளையெல்லாம் பிராமணர்கள்தான் செய்கிறார்கள், பண்டாரங்கள் செய்வதில்லை. மாரியம்மன், மாகாளியம்மன் போன்ற தெய்வங்களுக்கு முக்கியமாகப் பண்டாரங்கள்

பூசாரிகளாக இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் பலிவாங்கும் தெய்வங்கள் அதனால் அசைவர்கள் பூசாரிகளாக இருக்கிறார்கள். ஆகவே இத்தெய்வங்களுக்குக் கும்பம் தாளிப்பதற்கு அத்தெய்வங்களுக்கு உகந்த வேப்பிலையைப் பண்டாரங்கள் உபயோகப் படுத்துகிறார்கள். இவைகளை வைத்துப் பார்க்கும் பொழுது நீங்கள் குறிப்பிட்டது போல் மாவிலைகளை உபயோகிப்பதைப் பிராமணர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளார்கள் என்றும், வேப்பிலைகளை உபயோகிப்பதை அசைவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளார்கள் என்றும் கூறலாம். இப்பொழுதும் மாவிலை ஒரு பொதுவான தெய்வீக இலை (தழை) என்று கூறலாம்.

மாரியம்மன், மாகாளியம்மன் போன்ற தெய்வங்களுக்கு கும்பத்தில் வைக்கும் தேங்காயை அப்படியே கும்பத்துடன் கிணற்றில் விடுவது வழக்கம். அதே போல் புண்ணியார்ச்சனை, கும்பாபிஷேகம் போன்ற நிகழ்ச்சிகளின் போது கலசங்களின் மேல் வைக்கும் தேங்காய்களை பிராமணர் எடுத்துக் கொண்டு போய் வீட்டில் சமையலுக்கு உபயோகப்படுத்துகிறார்.

மாரியம்மன், மாகாளியம்மன் தெய்வங்களின் கும்பங்களில் வைக்கும் தேங்காய் கிணற்றுக்குள் போகவும், கும்பாபிஷேகம், புண்ணியார்ச்சனை போன்ற நிகழ்ச்சிகளுக்குக் கலசங்களின் மேல் வைக்கும் தேங்காய் மனிதனின் வயிற்றுக்குள் போக வேண்டுமென்ற முறையோ அல்லது சாஸ்திரமோ கிடையாது. இவைகள் எல்லாம் வழக்கத்தால் ஏற்பட்டதுதான். இப்பொழுதும் மாகாளியம்மன், மாரியம்மன் போன்ற தெய்வங்களுக்கு உபயோகப்படுத்தப்படும் கும்பங்கள் விழா முடிந்தவுடன் கிணற்றில் கொண்டு போய் விடுகிறார்கள். கும்பம் கிணற்றுக்குள் போவதால் கும்பத்தில் வைத்த தேங்காயும் கிணற்றுக்குள் போகிறது. ஆனால், புண்ணியார்ச்சனை, கும்பாபிஷேகம் போன்ற விசேஷங்களில் உபயோகப்படுத்தப்படும் கலசங்களை நிகழ்ச்சி முடிந்தவுடன் கொண்டுபோய் கிணற்றில் விடுவதில்லை. அதனால் அவைகளின் மேல் வைக்கும் தேங்காய்களும் கிணற்றுக்குள் போக வழியில்லாமல் மனித வயிற்றுக்குள் போகிறது அவ்வளவுதான்.

சிவசு முறைப்படி 'அத்தை!' என்றுதான் அம்மாவை (பாப்பம்மாளை)க் கூப்பிட வேண்டும். ஆனால் அம்மா கொஞ்சம் அதிக வயதானவர்களாக இருப்பதால் "ஆத்தா" என்று கூப்பிடுகிறான். "அத்தை" என்பது FZ, MBH, HM ஆகியோர்கள்தான். அதேபோல "ஆத்தா" என்பது FM, MM ஆகியோர்கள். ஆனால் சிவசு அம்மாவைக் கூப்பிடுவது மேற்கூறிய முறையான ஆத்தா அல்ல. கொஞ்சம் வயது அதிகமாக இருப்பதாலும், அம்மாவின் விருப்பத்தின் பேரிலும் ஆத்தா! என்று கூப்பிடுகிறான் அவ்வளவுதான். இந்தமாதிரி நிறைய குடும்பங்களில் அதிகவயதான தன்னுடைய மாமியாரை ஆத்தா! என்று கூப்பிடுவதுண்டு.



படத்தில் உள்ளது ஒரு பெண் தன்னுடைய தாய் மாமனையே கல்யாணம் செய்திருந்தால், அவளுடைய அம்மாவை அத்தை என்று கூப்பிடமாட்டாள் ஆத்தா! என்றுதான் கூப்பிடுவாள். இது முறையான ஆத்தா.

ஆனால் சிவசு போன்று தன்னுடைய மாமியாரை ஆத்தா என்று கூப்பிடும் பழக்கம் பண்டாரம் மற்றும் இதர ஜாதிகளிலும் சில உண்டு. காரணம் தன்னுடைய மாமியார் கொஞ்சம் அதிக வயதானவராக இருப்பதால்தானே தவிர, வேறு காரணம் எதுவுமில்லை.